


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | டிசம்பர் 13, 2018 | புரட்சி 17 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00


## அம்பேத்கர் நினைவு நாளில் கழகத்தினர் சூளுரை

# ஜாதி அடையாளம் அல்ல; அவமானம்

*புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளான டிசம்பர் 6ஆம் தேதி அம்பேத்கர் சிலைகளுக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு சூளுரை எடுத்தனர்.*

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு பேரணியாக வந்து மு.நாகராஜ் (அறிவியல் மன்ற அமைப்பாளர்) தலைமையில் மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு சூளுரை எடுத்தனர். இந்நிகழ்வில் கழகத்தின் மாவட்ட அமைப் பாளர் சி.சாமிதுரை முன்னிலை வகித்தார். ஜாதி ஒழிப்பு, ஆணவப் படுகொலைக்கு தனி சட்டம் ஆகியவற்றை வலியுறுத்தி முழக்க மிட்டனர்.

இரா.துளசிராஜா, குமார், பாரதிதாசன், ராமச்சந்திரன் கார்மேகம், நீதிபதி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் :** திவிக சேலம் மாநகரம் சார்பாக 6.12.2018 அன்று சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் மற்றும் சேலம் மாநகர செயலாளர் பரமேஸ்குமார் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர். நிகழ்வில் மாநகர தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை:** இந்திய உணவுக் கிடங்கு கழகத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு கோவை திராவிடர் விடுதலை கழகம் சார்பில் மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர். தோழர்கள் நேரு தாசு, ஜெயந்த், வெங்கட், இயல், மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், நிர்மல், கார்த்திக், ஸ்டாலின் ராஜா, சுரேஷ், அருண், மேட்டூர் பாலு கலந்து கொண்டனர். கோவை சிவானந்தா காலனியில் மக்கள் ஒற்றுமை மேடை சார்பில் அம்பேத்கர் நினைவு நாளில் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பும் வீரவணக்க மும் செலுத்தப்பட்டது. காந்திபுரம் வாழைக் காய் மண்டி பகுதியில் அம்பேத்கர் உருவப் படத்துக்கு மாலையிட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.




**சென்னை மாவட்டம் முழுவதும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டி**

**திருச்செங்கோடு :** திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், நகர செயலாளர் பூபதி தலைமையில், நகர அமைப்பாளர் தனலட்சுமி முன்னிலையில் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்கப் பட்டது. இந்த நிகழ்வில் நகர மற்றும் ஒன்றிய கழகத் தோழர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**சென்னை :** திராவிடர் விடுதலைக் கழகத் தின் சென்னை மாவட்டம் சார்பாக 06.12.2018 அன்று காலை 9 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்க முழக்கம் எழுப்பி ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர்.

தொடர்ந்து மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது. இராயப்பேட்டை பகுதியில் பெரியார் படிப்பகத்தில் டாக்டர் அம்பேத்கர் படத்திற்கு இரண்யா மாலை அணிவித்தார்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், கழகப் பொரு ளாளர் துரைசாமி தலைமையில், மாவட்ட தலைவர் முகில்ராசு, மாவட்ட அமைப்பாளர் கள் அகிலன், சங்கீதா முன்னிலையில் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்கப்பட்டது. நிகழ்வில் தோழர்கள் பரிமள ராசன், விஜய்குமார், மாதவன், முத்துலட்சுமி, சரஸ்வதி, முத்து, இராமசாமி, தேன்மொழி, அய்யப்பன், ஹரீஷ், நகுல் ஆகியோர் கலந்து கொண்டனர்

நிகழ்வில் இந்துத்துவத்தை எதிர்த்து பௌத்த மதம் தழுவிய அம்பேத்கரை நினைவு கூர்ந்து தோழர் துரைசாமி உரையாற்றினார். அகிலன் முழக்கங்களை எழுப்பிட கழக சார்பில் வீரவணக்கம் செலுத்தப் பட்டது. மாணவர் கழக அமைப்பாளர் தேன்மொழி ஜாதியெதிர்ப்பு உறுதிமொழி படிக்க அனைவரும் உறுதியேற்றனர்.

திருப்பூர் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணலின் சிலைக்கு மாலை அணிவித்து சாதி மத மறுப்பு உறுதி மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து பெரியார் சிலை அருகே எஸ்.டி.பி.அய். கட்சி சார்பில் நடைபெற்ற பாபர் மசூதி இடிப்பு (பயங்கரவாத ஒழிப்பு ) ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி கண்டன உரையாற்றினார்.

காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, வேலூர் நகரங்களிலும் கழகத் தோழர்கள் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர்.

## ‘இந்துமதம்’ நமது முன்னோர்கள் மீது திணிக்கப்பட்டது; விரும்பி ஏற்றது அல்ல!



வேத மதம் என்று அழைக்கப்பட்ட பண்டைய ஆரிய மதத்திற்கு மூன்று தனிப்பட்ட குணாம்சங்கள் இருந்தன. மாட்டிறைச்சி உண்பது, குடிப்பது மற்றும் கேளிக்கை களியாட்டங்களில் ஈடுபடுவது, இவை அன்றைய வேத மதத்தின் கூறுகளாகவே இருந்தன. இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இவற்றைப் பின்பற்றினார்கள். இப்போதும்கூட சில பார்ப்பனர்கள் அந்த நாட்களுக்குத் திரும்பிப் போய் விடமாட்டோமா என்ற ஏக்கத்தோடு கனவு காண்கிறார்கள். அந்தப் பண்டைய மதத்தோடு மட்டுமே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமிருந்திருந்தால் எதற்காக இந்திய மக்கள் அன்று இந்து மதத்தை உதறித் தள்ளிவிட்டு, புத்த மதத்தை ஏற்றுக் கொண்டார்கள்? எதற்காக அவர்கள் வேத மதத்தை உதறித்தள்ளிவிட்டு, சமண மதத்தை ஏற்றுக் கொண்டார்கள்? நம்முடைய முன்னோர்கள் அந்த மதத்திற்குள்ளேயே இருந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அவர்கள் தாங்களாகவே விருப்பப்பட்டு அந்த மதத்திற்குள் இருந்தார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நால்வர்ண அமைப்பு என்பது இந்த நாட்டில் பன்னெடுங்காலமாக நிலவிய ஓர் அமைப்பு. அதில் பார்ப்பனர்கள் கல்வி கற்பதற்கும் சத்திரியர்கள் போர் புரிவதற்கும் வைசியர்கள் பொருள் சேர்ப்பதற்கும் சூத்திரர்கள் ஏவல் செய்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இதுதான் அந்நாளைய நடைமுறைச் சட்டம். அப்படிப்பட்ட வாழ்க்கை முறையில் சூத்திரர்களிடம் கல்வி இல்லை, பொருள் இல்லை, ஆயுதங்களும் இல்லை. உங்களுடைய முன்னோர்கள் இது போன்றதொரு வறிய, கையறு நிலையில் வாழ்வதற்குத்தான் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு மதத்தை அவர்கள் தாங்களாகவே விரும்பி ஏற்றுக் கொண்டார்கள் என்று எந்த அறிவுள்ள மனிதனும் சொல்ல மாட்டான்.

இந்த இடத்தில், இப்படிப்பட்ட இந்து மதத்தை ஏற்று கிளர்ச்சி செய்யும் வாய்ப்பு உங்கள் முன்னோருக்கு இருந்திருக்க முடியுமா என்று எண்ணிப் பார்ப்பது அவசியம். அப்படி ஒரு வாய்ப்பு இருந்து அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று சொன்னால் அந்த மதத்தை அவர்கள் தாங்களாகவே ஏற்றுக் கொண் டார்கள் என்று சொல்லலாம். ஆனால் உண்மை நிலவரங்களை ஆராய்ந்தால் அந்த மதத்திலேயே வாழுமாறு நம் முன்னோர்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்கள் என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகவே, இந்த இந்து மதம் என்பது நம்முடைய முன்னோர்களுடைய மதம் அல்ல. மாறாக அவர்கள் மீது அடிமைத்தனத்தை வன்முறையாகத் திணித்த மதம். இதை எதிர்த்துப் போராட நம் முன்னோர்களிடம் எந்தவொரு வழி வகையும் இல்லை என்பதால்தான் அவர்களால் எதிர்த்துப் போராட முடியவில்லை. அதனால்தான் இந்த மதத்திற்குள்ளேயே இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய இந்த கையறு நிலையை யாரொருவரும் குற்றம் சொல்லிவிட முடியாது. மாறாக பரிதாபம்தான் கொள்வார்கள். ஆனால் இன்றைய தலைமுறையினர் மீது இதுபோன்ற எந்த வகையான அடிமைத்தனத்தையும் எவரொருவரும் கட்டாயப்படுத்தி திணிக்க முடியாது. அவர்களுக்கு அனைத்து வகையான சுதந்திரமும் இருக்கிறது. இந்த சுதந்திர வழிகளைக் கொண்டு அவர்கள் தங்களை விடுதலை செய்து கொள்ளத் தவறுவார்களேயானால் அவர்களை இந்த பூமியில் வாழ்வதிலேயே மிகக் கேவலமான, அடிமைப்புத்தி கொண்ட, அண்டிப் பிழைக்கும் பிறவிகள் என்று மிகுந்த வருத்தத்தோடு அழைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**1936, மே 30, 31 தேதிகளில் அம்பேத்கர் நடத்திய பம்பாய் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து**

## மேக தாது அணை: நடுவண் அரசின் துரோகம்

வீடு கட்டுவதற்கான திட்டங்களுக்குத்தான் வீட்டுவசதி வாரியம் ஒப்புதல் தந்திருக்கிறது. அதற்காக வீடு கட்டுவதற்கு ஒப்புதல் தரவேண்டும் என்ற அவசியமில்லை என்று வீட்டுவசதி வாரியம் கூறினால் எப்படி இருக்கும்? கட்டப் போகாத வீடுகளுக்கு ஏன் திட்ட நகலை தயாரிக்க வேண்டும்? அந்தத் திட்ட நகலுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று சராசரி அறிவுள்ளவர்கள் கூட கேட்பார்கள்.

காவிரியின் குறுக்கே மேகதாதுபகுதியில் அணைகட்டும் திட்டம் ஒன்றுக்கு வரைவு நகலை தயாரித்து கருநாடக அரசு மத்திய நீர் ஆணையத்துக்கு அனுப்பியவுடன், ஆணையம் ஒப்புதல் வழங்கி விட்டது. பா.ஜ.க.வினர், வரைவுத் திட்ட அறிக்கைக்குத் தானே ஒப்புதல் தரப்பட்டிருக்கிறது. திட்டத்துக்கு ஒப்புதல் தரவில்லையே என்று இப்போது வாதம் செய்கிறார்கள். காவிரிப் பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு; அதைத் தொடர்ந்து மத்திய நீர்வள அமைச்சகம் வெளியிட்ட அரசாணைகளின் அடிப்படையில் மேகதாதுவில் அணை கட்டும் முயற்சிகள் தொடங்கும் நிலையிலேயே அதைத் தடுத்திருக்க வேண்டும். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்ட போது அது அதிகாரமற்ற அமைப்பு என்று முன் வைக்கப்பட்ட கருத்து உறுதியாகியிருக்கிறது.

பெருமழை காலங்களில் தண்ணீர்தேக்க முடியாத நிலை வரும்போது கருநாடகம், தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடுவது வாடிக்கையாகிவிட்டது. இப்படி உபரியாக தமிழகத்துக்குத் தண்ணீர் திறப்பதையும்கூட தடுப்பதற்காகவே நீர்மின் திட்டங்களை உருவாக்கி அதற்காகத் தண்ணீரை கருநாடகத்திலேயே தேக்கி வைத்து விடலாம் என்று கடந்த 50 ஆண்டுகளாகவே கருநாடக அரசு முயற்சித்து வருகிறது. தமிழக அரசும் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

தமிழ்நாட்டோடு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய காவிரி நீரை கருநாடக அரசு மின் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்க மாற்றுத் திட்டம் ஒன்றை தி.மு.க. ஆட்சி முன் வைத்தது. மத்திய அரசே மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கி கருநாடகத்துக்கு 60 சதவீதம், தமிழ்நாட்டுக்கு 40 சதவீதம் என்று பகிர்ந்தளிக்கலாம் என்பதே அத் திட்டம். மன்மோகன்சிங் தலைமையிலிருந்த அரசும் இதை ஒப்புக் கொண்டது. ஆனால் கருநாடகம் ஏற்க மறுத்தது.

காவிரி நீரைத் தடுத்து நீர் மின் திட்டம் அமைக்கும் முயற்சிகள் குறித்து காவிரி நடுவர் மன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. கருநாடக அரசு நீர் மின் திட்டங்களை எப்போது அமைத்தாலும் அததற்காகத் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் தமிழ்நாட்டுக்கு பாதகமாகிவிடக் கூடாது. நடுவர் மன்றம் வரையறுத்துள்ள தமிழகத்துக்குத் தரவேண்டிய நீரின்அளவை சீர்குலைத்து விடக் கூடாது – என்று நடுவர் மன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது. உச்சநீதி மன்றமும் தனது இறுதித் தீர்ப்பில் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மேகதாதுவில் அணையோ, நீர்மின் திட்டமோ கட்டக் கூடாது என்று 2013இல் முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். 23.4.2015இல் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்த மத்திய நீர்வளத் துறை அமைச்சர், “கருநாடகத்தில் சிவசமுத்திரம் மின் திட்டத்துக்காக கருநாடக அரசு அனுமதி கோரியது. தொடர்புடைய மாநிலங்களின் கருத்தை அறிந்தே ஒப்புதல் தர முடியும் என்று மத்திய அரசு அனுமதி மறுத்து விட்டது” மேகதாது பற்றி எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று கூறினார்.

இப்போது கருநாடகத் தேர்தலை கருத்தில் கொண்டு பா.ஜ.க. இந்தப் பிரச்சினையில் அரசியல் விளையாட்டுகளைத் தொடங்கி மீண்டும் தமிழகத்துக்கு எதிரான துரோக நடவடிக்கைகளைத் தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் இதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

# எது இந்து மதம்? எது இந்துத்துவா?

ம.பி., இராஜஸ்தான் சட்டமன்றத் தேர்தல்கள் – பரப்புரைக் கூட்டத்தில் ‘இந்துத்துவம்’ குறித்து காரசார விவாதம் நடக்கிறது. காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி, இந்துத்துவத்தின் அடிப்படையை மோடி புரிந்து கொள்ளவில்லை என்று பேச, அதற்கு மோடி இந்துத்துவம் பற்றி நீங்கள் எங்கு தெரிந்து கொண்டீர்கள்? என்று எதிர் கேள்வி கேட்டிருக்கிறார்.

இரண்டு தரப்புக்கும் இப்போது நாம் சில கேள்விகளை கேட்க வேண்டியிருக்கிறது.

- ‘இந்து’ என்ற பெயர் - வேதம், இதிகாசம், புராணம் உள்ளிட்ட எந்த மத நூல்களிலாவது இருக்கிறதா? ‘இல்லை’ என்று கூறுகிறோம். இருக்கிறது என்பதற்கு ஆதாரம் காட்டத் தயாரா?

- இந்து மதத்தை விமர்சித்தால் ‘தேச விரோதிகள்’ என்று கூப்பாடு போடுகிற எச்.ராஜா உள்ளிட்ட பார்ப்பனர்களும் சங்பரிவாரங்களும் ‘இந்து’ என்ற பெயர் பிரிட்டிஷ்காரன் சூட்டியது என்பதை மறுக்க முடியுமா?

இந்து மதத்தின் ‘மனிதத் தெய்வமாகப்’ பார்ப்பனர்களும் சங்பரிவாரங்களும் தலையில் தூக்கி வைத்து ஆடிக் கொண்டிருக்கும் இறந்து போன சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியே இதை ஒப்புக் கொண்டிருக்கிறார் . ஆதாரம் இதோ:

“வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்ததால் நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது.” (ஆதாரம்: சங்கராச்சாரியின் உரைகளடங்கிய ‘தெய்வத்தின் குரல்’ முதல் தொகுதி)

‘இந்து’ என்ற ‘நாமகரணம்’ சூட்டியதே பிரிட்டிஷ்காரன் தான். இதை ஏற்றுக் கொள்வதற்குப் பெயர்தான் தேச பக்தியா?

- சரி; அரசியல் சட்டத்திலாவது ‘இந்து’ என்பதற்கான விளக்கம் இருக்கிறதா? இல்லை. யார் முஸ்லிம் இல்லையோ, யார் கிறிஸ்துவர் இல்லையோ, யார் பார்சி இல்லையோ, அவர்கள்தான் ‘இந்து’ என்றே சட்டம் கூறுகிறது. இஸ்லாம், கிறிஸ்துவம் போல் ‘இந்து’ என்பதை ஒரு மதமாக வரையறுக்க முடியாத நிலையில் இப்படி ஒரு குழப்பமான விளக்கத்தையே அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களால் தர முடிந்தது. ஆக, ‘இந்து’ என்று ஒரு வரையறுக்கப்பட்ட மதம் இருந்தது இல்லை என்பதை அரசியல் சட்டமே உணர்த்துகிறது என்பதை மறுக்க முடியுமா?

- பல பார்ப்பனத் தலைவர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் ‘இந்து மதம்’ பற்றி என்ன கூறியிருக்கிறார்கள்?

‘இந்து மதம் என்பதே - அண்மைக்காலத்தில் வந்த பெயர்தான்.’ - கூறியிருப்பவர் பார்ப்பனர்களின் தலைவரான இராஜாஜி. (ஆதாரம்: Hindusim: Doctrine and way of life)

“பழைய இலக்கியங்கள் எதிலுமே இந்து என்ற சொல்லே கிடையாது.” - இப்படி கூறியிருப்பவர் மறைந்த ஜவகர்லால் நேரு (ஆதாரம் : ‘Discovery of India’ நூல்)

“இந்து என்பது நமக்கு அன்னியர் கொடுத்த பெயர்.” - இப்படி கூறியிருப்பவர் பார்ப்பனர்கள் கொண்டாடிய சட்ட நிபுணர் பாஷ்யம் அய்யங்கார். (ஆதாரம் : ‘மெட்ராஸ் மெயில்’ ஏடு 19.12.1940)

“இந்து மதம் தெளிவற்றது. வரையறை ஏதும் இல்லாதது என்பதை உணர்ந்தே இருக்கிறேன்” - இப்படி தீர்ப்பில் எழுதியவர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த இராசமன்னார். (ஆதாரம்: மைக்கேல் எதிர் வெங்கடேசுவரன் வழக்கு - மெட்ராஸ் ஜெர்னல் தொகுப்பு 239/1052-1)

இந்தியாவின் தேசத் தந்தையான காந்தி என்ன கூறினார்?

“இந்து என்ற சொல் வேதத்தில் காணப்படவில்லை. மகா அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்தபோது சிந்துவுக்கு கிழக்கே உள்ள மக்களை இந்துக்கள் என்று குறிப்பிட்டனர்” என்கிறார் காந்தி. (ஆதாரம்: ‘ஹரிஜன்’ பத்திரிகை 30.11.1947)

பாரதியும் வரலாற்று ஆய்வாளரான நீலகண்ட சாஸ்திரியும் பிராமணிய - வைதீக மதம் தான் இந்து மதமாக பிறகு மாறியது என்கிறார்கள். (ஆதாரம்: பாரதி நூல்கள் - கட்டுரைகள்; நூல். நீலகண்ட சாஸ்திரியின் ‘பிராமண மதம்’ நூல்)

பிரிட்டிஷ்காரர்கள் சட்டத் தொகுப்புக்கு ‘இந்து’ என்ற பெயரை எப்படித் தேர்வு செய்தார்கள்? அதற்கு முன் எப்படி இந்தப் பெயர் வழக்கில் வந்தது என்பதற்கு ஆதாரம் வேண்டுமா? பாரசீகர்கள் தந்த பெயர்தான் ‘இந்து’; அதற்கு ஆதாரம் ‘அவாள்களே’ வெளியிட்ட நூல்.

சென்னையில் உள்ள ‘இராமகிருஷ்ணா மடம்’ வெளியிட்டுள்ள ‘இந்துமத சாரம்’ என்ற நூல் தரும் விளக்கம் இது.

“இந்து என்னும் பெயர் வந்த வகை ஒருவித வேடிக்கையானதே. பஞ்சாப்பிலே பழைய ஆரியர் குடியேறியிருந்த இடத்துக்கு சிந்து நதியே மேற்கு எல்லையாக இருந்தது. நதியின் எதிர்க்கரையில் வாழ்ந்தவர்கள் பண்டைக்கால அய்ரானியர் (பாரசீகர்). இந்த நதியின் பெயரைக் கொண்டே ஆரியரை பாரசீகர்கள் (அய்ரானியர்) அழைக்கலாயினர். ஆனால் அவர்களால் சிந்து என்று சரியாக உச்சரிக்க முடியவில்லை. அதை இந்து என்றனர். ஆதலின் பாரசீகர் இட்ட பெயர் ‘இந்து’ என்பதாயிற்று” - ஆக பாரசீர்கள் பெயர் சூட்டி, பிறகு சட்டத் தொகுப்புக்காக பிரிட்டிஷார் பாரசீகர் சூட்டிய பெயரை எடுத்துக் கொண்டார்கள். இதுவே ‘இந்து’.

‘இந்து’ என்ற மதப் பெயரே இவ்வளவு குழப்பம். அதை அரசியலாக்கி, பல்வேறு மதக் குழுக்களை ‘இந்து’ மதத்துக்குள் உள்ளிழுக்க சாவர்க்கர் உருவாக்கிய சொல் ‘இந்துத்துவா’.

இல்லாத ஒரு மதம் ‘இந்து’ - பார்ப்பனிய வர்ணாஸ்ரமத்தை சமூக அமைப்பாக்கிட இந்து மதம் சாராத வெகு மக்களை இழுத்து அவர்களை தங்களின் வேத சாஸ்திர அடிமைகளாக்கிட உருவாக்கிய கற்பனை மதம் தான் ‘இந்து’.

இந்துத்துவா என்றால் என்ன தெரியுமா என்று சவால் விட்டுக் கொண்டிருக்கும் இராகுலுக்கும் மோடிக்கும் ‘இந்து’ முன்னணி பின்னணிகளும் இந்த வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்!

## 2019ஆம் ஆண்டுக்கான கழக நாள்காட்டி

கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் தயாராகி வருகின்றன.

ஒரு நாள்காட்டியின் விலை ரூ.70/-

தேவைப்படுவோர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

முன் பதிவு எண்ணிக்கைக்கேற்ப மட்டுமே நாட்காட்டிகள் அச்சிடப்படுகின்றன.

தொடர்புக்கு :
தபசி. குமரன், தலைமைக் கழக செயலாளர்.

தொடர்பு எண் : 9444025408


– புரட்சிப் பெரியார் முழக்கம் 13.12.2018

## பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (1)

# பிரிட்டிஷ் ஆட்சி தொடர்ந்த இராஜதுவேஷ வழக்கு

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து.*

“பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்” என்ற தலைப்பு எனக்கு தரப்பட்டிருக்கிறது. பெரியார் இயக்க வரலாற்றிலிருந்து ஒரு சில நிகழ்வுகளை மட்டும் தேர்வு செய்து பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.



**அடக்குமுறைகளைக் கொண்டாடிய தலைவர் பெரியார்**

1932ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ பத்திரிகையில் “இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்” என்று பெரியார் எழுதிய கட்டுரைக்காக அவர் மீது ‘இராஜ துவேஷ’ வழக்கை அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி போட்டது. கட்டுரை அப்படி ஒன்றும் கடுமையானதும் அல்ல. “ஏழை எளிய மக்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளை வழங்காமல், பணக்காரர்களுக்கு, பரம்பரை மேல் ஜாதிக்காரர்களுக்கு மட்டும் அரசு மக்களின் வரிப்பணத்தை விரயமாக்குகிறது” என்பதே கட்டுரையின் உள்ளடக்கம் (குடிஅரசு, 29.10.1933). பெரியார் மட்டும் கைது செய்யப்படவில்லை. பத்திரிகையின் பதிப்பாளர் - அச்சிடுபவராக இருந்த பெரியாரின் தங்கை கண்ணம்மாவும் கைது செய்யப்பட்டார். கோவை நீதிமன்றம் பெரியாருக்கு 9 மாத தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதித்தது. அபராதம் செலுத்த மறுத்தால் மீண்டும் ஒரு மாதம் காவல். பெரியார் வழக்கம்போல் அபராதம் செலுத்தவில்லை. கண்ணம்மாளுக்கு 6 மாதம் தண்டனை; 300 ரூபாய் அபராதம், செலுத்தத் தவறினால் மேலும் ஒரு மாதம் சிறை.

பெரியார் எந்த ஒரு வழக்கிலும் வழக்கறிஞர் வைத்து எதிர் வழக்காடுவதில்லை. பிணை கேட்பதும் இல்லை. இதை இறுதி வரை ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தார். மாறாக வழக்கம்போல் நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலத்தைத் தாக்கல் செய்தார். ‘அடக்குமுறைகள்’ என்பதை பெரியார் எப்படிப் பார்த்தார்? அது குறித்து அவரது கண்ணோட்டம் எதுவாக இருந்தது என்பதற்கு சான்றாக அவரது வாக்குமூலத்தின் ஒரு பகுதியை சுட்டிக் காட்டுகிறேன்.

> “இந்த நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும் சரி; அல்லது இந்தப் பிராதுக்குப் போதிய ஆதாரமில்லையென்று, நியாயத்தையும் சட்டத்தையும் இலட்சியம் செய்து வழக்கைத் தள்ளிவிட்டாலும் சரி; **இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்”**

- என்று அந்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டார்.

அடக்குமுறைகளை தனது தோழர்கள் வரவேற்க வேண்டும் என்று பெரியார் கூறுவதற்கான காரணம் என்ன? தனது இலட்சியங்கள் மக்களிடம் சென்றடைவதற்கு - இந்த அடக்குமுறைகள் பயன்படும். அதற்காகவே ஆதரிக்க வேண்டும் என்று உறுதிபட நம்பினார். இது குறித்து எழுதும்போது பெரியார் கூறுகிறார்: “இதற்காக நாம் வருத்தப்படவில்லை; கவர்ன்மென்டார் மீதும் நிஷ்டூரப்படவும் (வருத்தமடையவும்) இல்லை. இதுவரை இப்படிச் செய்யாமல் விட்டு வைத்திருந்ததற்கு நன்றி செலுத்தவும் மகிழ்ச்சியடையவும் கடமைப்பட்டுள்ளேன்” என்று எழுதினார். காலையில் கைது செய்து திருமண மண்டபத்துக்கு அழைத்துப் போய் மதிய உணவு போட்டு மாலையில் மண்டபத்தை விட்டு விடுதலை செய்யப்பட்டு வருவதற்கே தியாகப் பட்டியல் தயாரிக்கும். இன்றைய சூழலில் பெரியாரின் பார்வை எப்படி இருந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இராஜ துவேஷ வழக்கைத் தொடர்ந்து பெரியார் நடத்திய ‘பத்திரிகை அலுவலகமும் பெரியாரின் தங்கை கண்ணம்மாள் வீடும் சோதனை போடப்படுகிறது. இரவு தொடர்வண்டியில் இருவரையும் ஏற்றி கோவைக்குக் கொண்டு போகிறார்கள். கண்ணம்மாள் மேல்முறையீடு செய்கிறார். பெரியார் மேல் முறையீடு செய்யவில்லை. 1933 ஜன.4இல் கைது செய்யப்பட்ட பெரியார் மே 15இல் விடுதலை செய்யப்படுகிறார். ஈரோட்டில் பெரியாருக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பெரியார் என்ன பேசினார் என்பதுதான் மிகவும் முக்கியம். இளைய தலைமுறை இந்த வரலாறுகளை அறிய வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். பெரியார் பேச்சை சாராம்சமாக இப்படி தொகுத்துக் கூறலாம்.

1. இது பாராட்டக் கூடிய பிரச்சினை அல்ல;
2. இந்த சிறைவாசம் நானாகப் போய் ஏற்றுக் கொண்டதும் அல்ல; சிறைக்குப் போவதற்கான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று கூறிய பெரியார், தொடர்ந்து “குடிஅரசு பத்திரிகையில் இப்போது நான் எழுதியது **ஒரு சாதாரணமானதும் சப்பையானதுமான** வியாசம் தான். மற்றபடி ஒரு சரியான காரியம் செய்துவிட்டு சிறைக்குப் போகவில்லை. சர்க்கார் இந்தக் ‘குடிஅரசு’ பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால் என்னை வருடக் கணக்கில் தண்டிக்கக் கூடியதும் நாடு கடத்தக் கூடியதுமான விசயங்கள் நூற்றுக்கணக்காகத் தென்படலாம். ஆனால் அவர்கள் அந்தக் காலத்தில் எல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை” என்று கூறிவிட்டு அப்படி சர்க்கார் ஏன் கவனிக்காமல் விட்டது என்பதற்கான காரணத்தையும் கூறுகிறார்.

“காங்கிரசுக்கு பாமர ஜனங்களிடம் இருந்த செல்வாக்கின் பயனால் நமதுகட்டுரைகளை பொது ஜனங்கள் இலட்சியம் செய்ய மாட்டார்கள் என்கிற தைரியத்தால் சர்க்கார் அப்போது சும்மா இருந்தார்கள் என்றே தோன்றுகிறது. ஆனால் இப்போது அப்படி சிறிய விஷயங்களையெல்லாம் வல்லமை பொருந்திய சர்க்கார் பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டதென்பது நன்றாய் தெரிகிறது. இதிலிருந்து நமது அபிப்பிராயத்தை மக்கள் மதிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் சுயமரியாதைக் கொள்கையை ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் சர்க்கார் இப்போது உணர்ந்ததாகத் தெரிகிறது” - என்று கூறுகிறார்.

விருப்பு வெறுப்பற்ற இத்தகைய சுயமதிப்பீட்டை ஒரு தலைவர் முன் வைக்கிறார் என்றால், அதில் அடங்கியுள்ள நேர்மையின் உச்சத்தை கருதிப் பார்க்க வேண்டும். ‘ஆகா, அடக்குமுறை வந்துவிட்டது; மக்கள் ஆதரவு நமது பக்கம் திரும்புவதை சர்க்கார் உணரத் தொடங்கிவிட்டது’ என்று அடக்குமுறையைக் கொண்டாடி மகிழ்கிறார்.

தனது சிறை வாழ்க்கை ஒன்றும் அப்படி கஷ்டமானதும் அல்ல என்றும் அதே பேச்சில் கூறுகிறார்: “இப்போது சிறையில் அதிகமாகக் கஷ்டம் இல்லை. 1921இல் நானும் தோழர்களும் கைதிகளாக்கப்பட்ட போது கையில் ‘சூட்டை’ போடுவதும் துன்பப்படுத்துவதுமான தொல்லைகள் மிகுந்திருந்தன. அந்தக் காலத்தில் பட்ட கஷ்டங்கள் இப்போது ஒன்றும் இல்லை. அப்போது இங்கே - இந்தக் கூட்டத்தில் இருக்கும் தோழர் ஜெயாவை ஜெயிலிலிருந்து வண்டியில் போட்டு வெளியில் அழைத்து வரப்பட்டது. (நடக்கக்கூட முடியாத நிலை) என்னைப் பொறுத்தவரை இப்போது அங்கு (சிறையில்) வெகு மரியாதையாக சாமி, பாபுஜி என்று உள்ளிருப்பவர்களாலும் அழைக்கப்பட்டதோடு, ஜெயில் அதிகாரிகளும் பயந்து நடுங்கும்படியான நிலைமையிலும் இருக்கிறது” - என்று கூறிவிட்டு, மேலும் பேசுகிறார், “நான் வெளியே வந்ததில் ஏன் வந்தோம் என்றே தோன்றுகிறது........ நான் ஏற்கனவே கைது செய்யப்பட்டது எல்லாம் சிவில் வழக்குகளில் தான். அதுவும் காய்ச்சல் காரணமாக இரண்டு மாதத்துக்குள் விடுதலை செய்யப்பட்டேன். அதனால் ‘தேசபக்தன்’ என்ற பெயரை அடைய முடியவில்லை. இப்போது இராஜ துரோகக் குற்றச்சாட்டில் கைது செய்து சர்க்கார் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விட்டார்கள்” (இப்போது நான் ‘தேசபக்தன்’ என்றாகி விட்டேன்) என்று கூறுகிறார். என்ன ஒரு கேலியும் கிண்டலும் இதில் புதைந்திருக்கிறது பாருங்கள். பேச்சை முடிக்கும்போது, “இதன் பயனால் அறியாமை மிகுந்த பாமர ஜனங்களால் நான் பாராட்டப்படக் கூடும். மற்றபடி அறிவாளிகள் நான் ஜெயிலுக்குச் சென்றதைப் பாராட்ட யாதொரு விஷயமும் இல்லை” என்று கூறி முடிக்கிறார்.

சிறைவாசத்தைப் பாராட்டி வரவேற்க ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசிய பேச்சு இது என்பதையும் கவனிக்க வேண்டும்.

இவ்வளவு மகிழ்ச்சியாக தனது சிறைவாசத்தையும் அடக்குமுறைகளையும் கொண்டாடிய பெரியாரின் உடல்நிலை அவர் சிறைக்குப் போவதற்கு முன்பு எப்படி இருந்தது என்பதையும், அவர் எழுத்து வழியாகவே நாம் அறிய முடிகிறது.

“நமது உடல்நிலை, 5, 6 மாதமாய் மிகவும் அதிகம் சீர்கெட்டு விட்டது. மயக்கமும் மார்புவலியும் மிக அதிகம். கால்களில் நீர்ஏறி வீக்கம்; காதுகளும் சரியாகக் கேட்பது இல்லை. ஆதலால் எப்படி ஓய்வெடுப்பது என்று எண்ணியதுடன், இனி உயிர் வாழ்வதும் உலகுக்குப் பாரம் என்றே எண்ணினோம். இந்த நிலையில் ‘குடிஅரசு’ நின்று போக ஏற்பட்டால் தோழர் நாகம்மாள் மறைவு ஏற்பட்டதுபோலவே மற்றொரு விதத்தில் நமக்கு நன்மை என்றே கொள்ள வேண்டியதாகும்” - இதுதான் பெரியார் சிறை செல்வதற்கு முன்பு இருந்த அவரது உடல் நிலை; மன நிலை.

பெரியாருக்கு அப்போது வயது 54தான். அதற்குப் பிறகு 93 வயது வரை அவர் வாழ்ந்தார் என்றால் பொது வாழ்க்கையும் போராட்டமும் தந்த உற்சாகம்தான். அவரது ஆயுளை நீடிக்கச் செய்திருக்கிறது.

பெரியாருடன் சுயமரியாதை இயக்கத்தில் பயணித்து நீதிக்கட்சி, திராவிடர் கழகமானபோது, விலகி நின்ற ஆற்றல்மிகு எழுத்தாளர் மணவை திருமலைசாமி; 1938 இந்தி எதிர்ப்புப் போரில் வழி நடைப் படையில் பங்கேற்ற முன்னணி தளபதி; அவர் நடத்திய ‘நகரதூதன்’ ஏட்டில் அவரது எழுத்துகள் மிகப் பெரும் வாசகர் கூட்டத்தை அவர்பால் ஈர்த்தது. பெரியார் இராஜதுரோக வழக்கில் கைது செய்யப்பட்டது குறித்து அவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இது.

“கைது செய்யப்பட்டது தோழர் இராமசாமிக்கு ரெட்டை சந்தோஷம். இந்த சாக்கில் உள்ளே போய்விட்டு வந்தால் ஊக்கம் ரொம்பவே ஏற்படும் என்பது அவரது ஆசை................ அப்பப்பா இந்தப் பழுத்த வயதில் இவ்வளவு பிடிவாதம் கூடாது. எதிர் வழக்காடக் கூடாது என்பதில்தான் இவ்வளவு முரட்டுத்தனம் என்றால்,

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# டிசம்பர் 23 பேரணி
## தோழர்களே தயாராகி விட்டீர்களா?

திருச்சியில் டிசம்பர் 23இல் பெரியார் உணர்வாளர்கள் நடந்த இருக்கும் கருஞ்சட்டைப் பேரணிக்கு பேராதரவு பெருகி வருகிறது. கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் மிகவும் உற்சாகத்துடன் இந்த முயற்சியை பாராட்டி வரவேற்று பேரணியில் பங்கேற்க ஆர்வம் காட்டி வருகின்றனர். புதிய அமைப்புகளும் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகின்றன.

அதிகாரம் இருக்கிறது என்ற இறுமாப்புடன் தமிழ்நாட்டின் தனித்துவத்துக்கும் சமூக நீதிக்கும் சவால் விட்டு வரும் மதவெறி சக்திகளுக்கு தமிழ்நாடு - பெரியார் மண் என்பதை உணர்த்துவோம்.

திருச்சி கருஞ்சட்டைக் கடலாக வேண்டும் தோழர்களே!

தனிப் பேருந்துகளில் அணி அணியாகத் திரளுவீர்!

# மதவாதிகளின் முயற்சி முறியடிப்பு



திருப்பூரில் இந்து முன்னனி அமைப்பைச் சார்ந்தவர் களின் மகா யாக பூஜைக்கு பள்ளி மாணவர் களிடம் செங்கல், பூ, நெய் ஆகியவை எடுத்து வர வலியுறுத்தப்பட்டார்கள் அதை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையாக மாவட்ட ஆட்சியரிடமும், கல்வி முதன்மை அதிகாரியிடமும் திருப்பூர் கழகம் சார்பில் 3.12.2018 அன்று புகார் மனு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனு மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

நிகழ்வில் திராவிடர் விடுதலைக்கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், பதியம் இலக்கிய அமைப்பு மற்றும் பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டன.

# நாத்திகம் முருகேசன் துணைவியார் முடிவெய்தினார்

ஆழ்வை ஒன்றிய தி.வி.க. தலைவர் நாத்திகம் முருகேசன் துணைவியார் திருமதி. சந்திரா (வயது 65) 30.11.2018 மாலை 4.00 மணியளவில் முடிவெய்தினார். அவரது உடல் நல்லடக்கம் ஆழ்வார் தோப்பில் 01.12.2018மதியம் 1.00 மணியளவில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகப் பரப்புரைச் செயலாளர் பால் .பிரபாகரன் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினார்.

நிகழ்வில் நெல்லை மாவட்டத் தலைவர் பா. பால்வண்ணன், நெல்லை மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராஜன், தமிழ்நாடு அறிவியல் மன்ற நெல்லை மாவட்ட பொறுப்பாளர் ச. தமிழன், நெல்லை மாவட்ட அமைப்பாளர் சு. அன்பரசு, கீழப்பாவூர் ஒன்றிய தலைவர் அ.மாசிலாமணி, தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன், மாவட்ட துணைச் செயலாளர் ச.கா.பால சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் சந்திரசேகர், தூத்துக்குடி மாவட்டத் தலைவர் கோ.அ.குமார், வே.பால்ராசு, சா.த.பிரபாகரன், செ.செல்லத்துரை. குமணன், பாரி, மனோஜ் மற்றும் தூத்துக்குடி நெல்லை மாவட்ட தி.வி.க. தோழர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். எவ்வித சடங்குகள் இன்றி நிகழ்வு நடைபெற்றது.

### சிறைக்குள் மரணமடைந்த ஜாதி ஒழிப்புப் போராளி நன்னிமங்கலம்
## கணேசன் நினைவிடத்தில் தோழர்கள் உறுதி ஏற்பு

ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து கோவை சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல தோழர்களில் நண்ணிமங்கலம் கணேசன் ஒருவர். அவர் சிறையிலேயே இறந்துவிட்டார். அவருடைய உடல் கோவை ஆத்துப்பாலம் சுடுகாட்டில் பெரியாரின் போர்வாள் எம்.ஆர்.ராதா மனைவி பிரேமாவதி மற்றும் மகன் தமிழரசன் நினைவிடத்திற்கு அருகே புதைக்கப் பட்டுள்ளார். அவரை நினைவு படுத்தும் விதமாக ஆத்துப்பாலம் சுடுகாட்டில் கோவை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம் வெங்கட் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன் உடுமலை இயல் கிருஷ்ணன் நிர்மல்குமார் மலர் வளையம் வைத்து ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலமாவது கொஞ்சம் ஈனஸ்வரத்தில் கொடுத்திருக்கக் கூடாதா? குடிஅரசு தலையங்கம் ஒரு படியைத் தாண்டியிருந்தது என்றால், இவரது வாக்குமூலம் ஒன்பத்திரண்டு படியையும் தாண்டிவிட்டது.

“கடைசியாக பப்ளிக் பிராசிகியூட்டர் தனது ‘ஆர்குமென்டைப் (வாதங்களை)’ பேசும்போது பார்க்க வேண்டுமே, இவரது குறும்புத்தனத்தை. அவர் பேசும்போது, பத்திரிகை வாசகங்களைப் படித்துக் காட்டி இந்த இடத்தில் இராஜ துவேஷம் இருக்கிறது. இந்த இடத்தில் பொதுவுடைமையில் பிரச்சாரம் இருக்கிறது என்று எடுத்துக்காட்டும் போது, தோழர் இராமசாமி ‘ஸ்பிரிங்’ பொம்மையைப் போல் தலையை அசைத்து அசைத்து ஆட்டிக் கொண்டு, அதற்குத் துணையாக ஆள்காட்டி விரலையும் பலகையில் அடித்துக் கொண்டு ‘பப்ளிக் பிராசிகியூட்டர்’ சொல்வதெல்லாம் வாஸ்தவம் எனச் சொல்லுவதுபோல் தலையாட்டி வந்தார். தீர்ப்புக் கூறியதும் அவரது முகம் பொலிவு படம் பிடிக்கக்கூடியதாயிருந்தது” என்று அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டினார்.

இராஜதுரோக வழக்கு பாய்ந்ததற்காக அவ்வளவு மகிழ்ந்து உற்சாகமடைந்த பெரியார், இந்த கைதின் வழியாக ‘எனக்கு தேசபக்தன்’ பட்டம் கிடைத்து விட்டது என்று வரவேற்பில் கூறியுள்ள நக்கலையும் புரிந்து கொள்ள முடியும்.

(தொடரும்)

# சந்தா சேர்ப்பு இயக்கம்:
## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

கழக ஏடுகளான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்களுக்கான சந்தா சேர்ப்புப் பணிகளை டிசம்பர் 15ஆம் தேதிக்குள் முடித்துத் தருமாறு தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத்தின் இணைப்பு சக்தியாய் விளங்குவது கழகத்தின் ஏடுகள் தான்!

கழக ஏடுகளை பரப்புவதன் வழியாக கழகத்தின் வளர்ச்சியை மேலும் தீவிரமாக்க முடியும் என்பதை உணர்ந்து சந்தா சேர்ப்பு இயக்கத்தில் முனைப்புக் காட்டி செயல்படுமாறு தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**– தலைமைக் கழகம்**

# சின்னியம்பாளையத்தில் அம்பேத்கர் நினைவு பொதுக் கூட்டம்




கோவை சின்னியம் பாளையத்தில் டிசம்பர் 6ஆம் தேதி அம்பேத்கரின் 62 ஆவது நினைவு நாளை முன்னிட்டு டிசம்பர் 1ஆம் தேதி நினைவு நாள் பொதுக்கூட்டம் சிவா தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் சீலாராஜ் உரையாற்றினர். டி.கே.ஆர். குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் திராவிடர் விடுதலை கழகத்தில் சிலம்பரசன் (வழக்கறிஞர்), ரஞ்சித் இணைந்தனர். அவர்களுக்கு நிமிர்வோம் இதழை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கி வரவேற்றார்.

# தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் பாசிச எதிர்ப்பு நாள் கண்டன ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் சேலம் மேற்கு மாவட்டம் சார்பாக 06.12.2018 அன்று பாசிச எதிர்ப்பு நாள் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் உமா சங்கர் (வனவாசி நகர செய லாளர்) கண்டன உரையாற்றி னார். சேலம் மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணன், நங்கவள்ளி நகரச் செயலாளர் கண்ணன், நகர துணைத் தலைவர் குமார், சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கஜா புயல் : வேலூர் மாவட்டக் கழகத் தோழர்கள் நேரில் நிவாரண உதவி

கஜா புயல் நிவரணத்திற்காக வேலூர் மாவட்ட திவிக தோழர் களால் திரட்டப் பட்ட பொருட் கள் தஞ்சாவூர் மாவட்டம் பட்டு கோட்டை வட்டம் வாட்டா குடி மற்றும் இரண்யன் நகர் உள்ளிட்ட 3 குக்கிராமங்களைச் சேர்ந்த 156 குடும்பங்களுக்கு கழகத் தோழர்களின் உதவியுடன் வேலூர் மாவட்ட திவிக தோழர்கள் நேரில் சென்று வழங்கினர்.

1 குடும்பத்திற்கு 2.5 கிலோ காய்கறி, 1.25 கிலோ அரிசி, 1 ப்ரெட் பாக்கெட், 1 வரக்கி பாக்கெட் , 100கிராம் கடலை எண்ணெய், 50கிராம் மிளகுதூள் பாக்கெட், 1 நாப்கின் பாக்கெட், 1 பாக்கெட் பன், 1 தைலம், 1 கொசுவத்தி, 1 வத்திப் பெட்டி என பல்வேறு பொருட்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது.

ஆசிரியர்கள் கஜேந்திரன், பாஸ்கரன், சுதகார், பார்த்திபன், வழக்கறிஞர் மகேஷ் குமார், பாரத் தமிழ், மாதேஷ், பாண்டியன், மாதேஷ், திருமலை ஆகியோர் அடங்கிய குழு சென்றது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th December 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN